செய்தி வெளியீடு எண் : 1675 நாள் : 26.09.2022

**செய்தி வெளியீடு**

**இன்று (26.9.2022) தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு அவர்களை, கொரிய நாட்டின் முன்னணி சிவில் பொறியியல் ஆலோசனை கழக குழுவினர் சந்தித்து ஆலோசனை மேற்கொண்டனர்.**

---

இன்று (26.9.2022) தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு அவர்களை, கொரிய நாட்டின் முன்னணி சிவில் பொறியியல் ஆலோசனை கழக குழுவினர், கொரியா இன்ஜினியரிங் கன்சல்டன்ட்ஸ் கார்ப்பரேஷன் (KECC) ஆலோசகர் செல்வி. ஜயாங் இம் அவர்கள் தலைமையில் சந்தித்து “பொறியியல் சேவைகளை நவீன தொழில்நுட்பத்துடன் விரைவாக செயல்படுத்துவது” தொடர்பாக ஆலோசனை மேற்கொண்டனர்.

தற்போது, கொரியாவில் நடைமுறையில் உள்ள பல்வேறு நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய, விரைவாகவும், எளிதாகவும் செயல்படுத்துவதற்கான தொழில்நுட்பங்கள், இதுவரை பல்வேறு நாடுகளில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் தொடர்பாகவும், தமிழ்நாட்டில் தொடங்கவிருக்கும் பல்வேறு சிவில் பொறியியல் திட்டங்கள் குறித்தும் விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

இந்த ஆலோசனை கூட்டத்தில் நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு. பிரதீப் யாதவ் இ.ஆ.ப., பொதுப்பணித்துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு. மணிவாசகன் இ.ஆ.ப., கொரியா சங்மோ ஜெனரல் கன்ஸ்ட்ரக்ஷன் தலைமை செயல் அலுவலர் திரு. ஜயாங் ஜியோங், கொரியா டேடோ என்டெக் தலைமை செயல் அலுவலர் திரு. ஜங் சூ சாங், அபுதாபியை சேர்ந்த கொரியா இன்ஜினியரிங் கன்சல்டன்ட்ஸ் கார்ப்பரேஷன் நிர்வாகிகள் திரு. முகமது சஹீத், திரு. முகமது ரஃபி மற்றும் இந்தியாவை சேர்ந்த திரு. ராஜ்குமார், திரு. மராட்டி ரவி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in